**Marking Scheme**

**Strictly Confidential**

**(For Internal and Restricted use only)**

**Secondary School Examination, 2025**

**SUBJECT NAME TAMIL (Q.P. CODE 10)-006 SET-4**

**<u>General Instructions: -</u>**

| | |
|---|---|
| **1** | You are aware that evaluation is the most important process in the actual and correct assessment of the candidates. A small mistake in evaluation may lead to serious problems which may affect the future of the candidates, education system and teaching profession. To avoid mistakes, it is requested that before starting evaluation, you must read and understand the spot evaluation guidelines carefully. |
| **2** | **“Evaluation policy is a confidential policy as it is related to the confidentiality of the examinations conducted, Evaluation done and several other aspects. Its’ leakage to public in any manner could lead to derailment of the examination system and affect the life and future of millions of candidates. Sharing this policy/document to anyone, publishing in any magazine and printing in News Paper/Website etc may invite action under various rules of the Board and IPC.”** |
| **3** | Evaluation is to be done as per instructions provided in the Marking Scheme. It should not be done according to one’s own interpretation or any other consideration. Marking Scheme should be strictly adhered to and religiously followed. **However, while evaluating, answers which are based on latest information or knowledge and/or are innovative, they may be assessed for their correctness otherwise and due marks be awarded to them. In class-X, while evaluating two competency-based questions, please try to understand given answer and even if reply is not from marking scheme but correct competency is enumerated by the candidate, due marks should be awarded.** |
| **4** | The Marking scheme carries only suggested value points for the answers<br>These are in the nature of Guidelines only and do not constitute the complete answer. The students can have their own expression and if the expression is correct, the due marks should be awarded accordingly. |
| **5** | The Head-Examiner must go through the first five answer books evaluated by each evaluator on the first day, to ensure that evaluation has been carried out as per the instructions given in the Marking Scheme. If there is any variation, the same should be zero after delibration and discussion. The remaining answer books meant for evaluation shall be given only after ensuring that there is no significant variation in the marking of individual evaluators. |
| **6** | Evaluators will mark( √ ) wherever answer is correct. For wrong answer CROSS ‘X” be marked. Evaluators will not put right (✓) while evaluating which gives an impression that answer is correct and no marks are awarded. **This is most common mistake which evaluators are committing.** |

| | |
|---|---|
| **7** | If a question has parts, please award marks on the right-hand side for each part. Marks awarded for different parts of the question should then be totaled up and written in the left-hand margin and encircled. This may be followed strictly. |
| **8** | If a question does not have any parts, marks must be awarded in the left-hand margin and encircled. This may also be followed strictly. |
| **9** | If a student has attempted an extra question, answer of the question deserving more marks should be retained and the other answer scored out with a note **"Extra Question"**. |
| **10** | No marks to be deducted for the cumulative effect of an error. It should be penalized only once. |
| **11** | A full scale of marks __________(example 0 to 80/70/60/50/40/30 marks as given in Question Paper) has to be used. Please do not hesitate to award full marks if the answer deserves it. |
| **12** | Every examiner has to necessarily do evaluation work for full working hours i.e., 8 hours every day and evaluate 20 answer books per day in main subjects and 25 answer books per day in other subjects (Details are given in Spot Guidelines).This is in view of the reduced syllabus and number of questions in question paper. |
| **13** | Ensure that you do not make the following common types of errors committed by the Examiner in the past:-<br>● Leaving answer or part thereof unassessed in an answer book.<br>● Giving more marks for an answer than assigned to it.<br>● Wrong totaling of marks awarded on an answer.<br>● Wrong transfer of marks from the inside pages of the answer book to the title page.<br>● Wrong question wise totaling on the title page.<br>● Wrong totaling of marks of the two columns on the title page.<br>● Wrong grand total.<br>● Marks in words and figures not tallying/not same.<br>● Wrong transfer of marks from the answer book to online award list.<br>● Answers marked as correct, but marks not awarded. (Ensure that the right tick mark is correctly and clearly indicated. It should merely be a line. Same is with the X for incorrect answer.)<br>● Half or a part of answer marked correct and the rest as wrong, but no marks awarded. |
| **14** | While evaluating the answer books if the answer is found to be totally incorrect, it should be marked as cross (X) and awarded zero (0)Marks. |
| **15** | Any un assessed portion, non-carrying over of marks to the title page, or totaling error detected by the candidate shall damage the prestige of all the personnel engaged in the evaluation work as also of the Board. Hence, in order to uphold the prestige of all concerned, it is again reiterated that the instructions be followed meticulously and judiciously. |
| **16** | The Examiners should acquaint themselves with the guidelines given in the "**Guidelines for spot Evaluation**" before starting the actual evaluation. |
| **17** | Every Examiner shall also ensure that all the answers are evaluated, marks carried over to the title page, correctly totaled and written in figures and words. |

| | |
|---|---|
| **18** | The candidates are entitled to obtain photocopy of the Answer Book on request on payment of the prescribed processing fee. All Examiners/Additional Head Examiners/Head Examiners are once again reminded that they must ensure that evaluation is carried out strictly as per value points for each answer as given in the Marking Scheme. |

| | | |
|---|---|---|
| | **மத்திய இளநிலைக் கல்விக் கழகம்** | |
| | **விடைத்தாள் மதிப்பீட்டு வழிகாட்டி – 2025** | |
| | **வகுப்பு : 10 தமிழ் - 006** | |
| | **மொத்த மதிப்பெண்கள் – 80** | |
| | இருபத்து ஆறு (26) மதிப்பெண்களுக்குக் கீழ் பெறக் கூடிய விடைத்தாள்களைத் தலைமைத் தேர்வாளரின் ஒப்புதலுக்குப் பிறகே பதிவு செய்ய வேண்டும். | |
| | விடைகளுக்கு உரிய மதிப்பெண்கள் விடைத் தாளின் வலப் பக்கத்திலும் மொத்த மதிப்பெண்கள் விடைத்தாளின் இடப்பக்கத்திலும் எழுதி வட்டமிடுதல் வேண்டும். விடைகள் சரியாக எழுதியிருப்பின்( ✓ ) என்றும் விடை தவறு எனின் (**X**) என்றும் குறியிட வேண்டும். தவறு எனின் **ZERO** என்று வலப்பக்கத்தில் எழுத்தில் எழுத வேண்டும். விடை எழுதாமல் வினா மட்டும் எழுதியிருப்பின் ( **-** ) இட வேண்டும். | |
| | விடைத்தாளில் எழுதாத பக்கங்களை அடிக்க வேண்டும், விடைத்தாளின் முதல் மற்றும் இறுதிப் | |

| | | |
|---|---|---|
| | பக்கத்தில் தேர்வாளரின் கையொப்பம் ,தேர்வாளர் எண்,மாணவர் பெற்ற மொத்த மதிப்பெண்கள் ஆகியவற்றைக் குறிப்பிட வேண்டும். மாணவர் பெற்ற மொத்த மதிப்பெண்களை எழுதி வட்டமிடுதல் வேண்டும். | |
| | தேர்வுத்தாள் உரிய தேர்வாளரால் திருத்தப்பட்ட பின் மற்றொரு தேர்வாளர் அவ்விடைத்தாளின் மதிப்பெண்களின் கூட்டுத் தொகை மற்றும் எழுதப்பட்ட சரியான விடைகளுக்கு மதிப்பெண் வழங்கப்பட்டுள்ளதா என்பதைச் சரிபார்த்துத் தங்கள் தேர்வாளர் எண், கையொப்பம் ஆகியவற்றை இட வேண்டும். திருத்தங்கள் இருப்பின் உரிய தேர்வாளரிடம் கொடுத்துத் திருத்தங்கள் செய்ய வேண்டும். | |
| | புள்ளி விவரங்களுக்காக ஒவ்வொரு நாளும் மதிப்பீடு செய்யும் விடைத்தாள்களின் மதிப்பெண்களை மட்டும் குறித்து வைத்துக் கொள்ள வேண்டும். | |
| 1. | வினாத்தாளில் கொடுக்கப்பட்டுள்ள முதல் பத்தி | 5 x 1 = 5 |

| | | |
|---|---|---|
| | வினா விடைகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட விடைகள் சரியாக இருப்பின் முழு மதிப்பெண்கள் வழங்கலாம். | |
| 2. | பத்தி வினா விடைகளுக்குச் சரியான விடை எழுதி இருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம். | 5 x 1 = 5 |
| 3 – 6 | இலக்கண விடைகள் சரியாக எழுதி இருப்பின் முழு மதிப்பெண்கள் வழங்கலாம். இலக்கண வினாக்கள் ஒவ்வொரு பகுதிக்கும் 3 விடைகளுக்குப் பதிலாக 5 விடைகள் எழுதியிருப்பின் 5 இல் சரியான மூன்று விடைகளைத் தேர்ந்தெடுத்து மதிப்பெண் வழங்கலாம். | 12 x 1 = 12 |
| 7. | திருக்குறள் நிரப்புக கோடிட்ட இடத்தில் சரியான சீர் தேர்ந்தெடுத்து எழுதியிருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம். | 2 x 1 = 2 |
| 8. | செய்யுளடி வினாக்களுக்குச் சரியான விடைகளைத் தேர்ந்தெடுத்து எழுதியிருப்பின் முழு மதிப்பெண்கள் வழங்கலாம். | 5 x 1 = 5 |
| 9. | செய்யுள் வினாக்களுக்குப் பொருத்தமான விடை | |

| | | |
|---|---|---|
| | எழுதியிருப்பின் முழு மதிப்பெண்கள் வழங்கலாம். மூன்று மதிப்பெண்களுக்குக் குறைந்த பட்சம் 2 மதிப்பெண்கள் வீதம் வழங்கலாம். | 3 x 3 = 9 |
| 10. | உரைநடை வினாக்களுக்குப் பொருத்தமான விடை எழுதியிருப்பின் 5 மதிப்பெண்கள் வழங்கலாம். பிழைகள் இருப்பின் 5 மதிப்பெண்களுக்குக் குறைந்த பட்சம் 3 மதிப்பெண்கள் வீதம் வழங்கலாம். | 3 x 5 = 15 |
| 11. | துணைப்பாடக் கட்டுரை முன்னுரை ,முடிவுரை, பக்கத் தலைப்புகளின்றிச் சுருக்கமாகப் பத்தி வடிவில் எழுதியிருப்பின் 7/10 மதிப்பெண்களும் கட்டுரை வடிவில் பிழைகளின்றி எழுதியிருப்பின் 10/10 மதிப்பெண்களும் பிழைகள் இருப்பின் குறைந்த பட்சம் 8/10 மதிப்பெண்களும் வழங்கலாம். அவ்வப் பகுதிகளுக்குரிய மதிப்பெண்களை இட்டு மொத்த மதிப்பெண்களை இடப்பக்கம் வழங்கி அதனை வட்டமிட வேண்டும். | 10 x 1= 10 |
| 12. | | |

| | | |
|---|---|---|
| | காட்சியைக் கண்டு கவினுற எழுதுக பகுதியில் படத்துக்குத் தகுந்த தலைப்புடன் 4 முதல் 5 தொடர்கள் எழுதியிருப்பின் 3/3 மதிப்பெண்கள் வழங்கலாம். குறைந்தபட்சம் 2 மதிப்பெண்கள் வழங்கலாம். | 1 X 3 = 3 |
| 13. | கடிதம் உரிய வடிவமைப்புடன் எழுதியிருப்பின் அவ்வப்பகுதிகளுக்குத் தனித்தனியாக மதிப்பெண்களை இட்டு மொத்த மதிப்பெண்களை இடப்பக்கம் எழுதி வட்டமிடவேண்டும். | 1 X 8 = 8 |
| 14. | கட்டுரை – தலைப்பு ,முன்னுரை, தக்க உட் தலைப்புகள் , மேற்கோள்கள் எழுதியிருப்பின் அவ்வப் பகுதிகளுக்குரிய மதிப்பெண்களை இட்டு மொத்த மதிப்பெண்களை இடப்பக்கம் வழங்கி வட்டமிடவும். | 1 x 6 = 6 |
| | அதிகபட்ச மதிப்பெண் **80 /80** . தகுதியான பிழைகளற்ற விடைத்தாள்களுக்கு மட்டுமே வழங்க வேண்டும். | |

**SET: 4**

**MARKING SCHEME FOR BOARD EXAM – 2024 - 2025**

**மதிப்பெண் வழங்கும் முறை ( X – STD – TAMIL )**

**வகுப்பு :10** **தமிழ் : 006**

**மொத்த மதிப்பெண்கள் : 80**

---

**SECTION – A(READING) 10 MARKS**

**பகுதி -அ (படித்தல் திறன் ) 10 மதிப்பெண்கள்**

**1.பின்வரும் உரைநடைப் பத்தியைப் படித்து, கொடுக்கப்பட்ட பலவுள் தெரிவுசெய் வினாக்களுக்கு ஏற்ற விடை எழுதுக** 5 X 1 = 5

i) A) காகிதம் **,** மேசை 1

ii) B) சாலையின் இரு மருங்கிலும் மரம் நட்டார். 1

iii) D) அரண் 1

iv) B) உயிர்க்காற்று 1

v) C) மண் வளம் 1

**2. பின்வரும் பகுதியைப் படித்து, கொடுக்கப்பட்ட வினாக்களுக்கு ஏற்ற விடை எழுதுக** 5 X 1 = 5

i) நீள்மாடக்கூடல் அமைந்த இடம் **மதுரை.** 1

ii) பண்டகச் சாலைகளில் **சரக்குகள்** நிறைந்திருந்தன. 1

iii) மாளிகைகளில் **நிலா முற்றம்** அமைக்கப்பட்டிருந்தது. 1

iv) மன்னர்கள் காலத்தில் **பேரிசைக் கோவிலும் கடவுளர் கோவில்களும் பள்ளிகளும்** சிறந்து விளங்கின. 1

v) சேர நாட்டின் தலைநகரம் **வஞ்சி மாநகரம்**. 1

**SECTION - B (GRAMMAR) 12 MARKS**

**பகுதி -ஆ (இலக்கணப் பகுதி ) 12 மதிப்பெண்கள்**

3. **சான்று தருக ( மூன்றனுக்கு மட்டும் )** 3 X 1 = 3

i) C) நிரை கவர்தல் 1

ii) A) ஒரு பொருளை வாங்கும் பொருட்டு வினவும் வினா 1

iii) D) நீர், நீவிர் 1

iv) C) சாலப் புகழ்ந்தான் 1

v) B) மொழி கற்றான் 1

4. **நிரப்புக (மூன்றனுக்கு மட்டும்)** 3 X 1 = 3

i) D) அன்மொழித்தொகை 1

ii) B) இரண்டு 1

iii) C) பொருள் 1

iv) B) உற்றது உரைத்தல் 1

v) B) ஆண்பால், பெண்பால் ,பலர்பால் 1

5.**இலக்கணக் குறிப்புத் தருக(மூன்றனுக்கு மட்டும்)**3 X 1 = 3

i) C) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் என்பதே சரியான விடை எனினும் பத்தாம் வகுப்புப் பாடத்திட்டத்தில் ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் என்னும் இலக்கணப் பகுதி இல்லாததால் A, B, C, D இவற்றுள் எவ்விடை எழுதியிருப்பினும் 1 மதிப்பெண் வழங்கலாம். 1

ii) C) சொல்லிசை அளபெடை 1

iii) B) வேற்றுமைத் தொகை 1

iv) C) பொதுமொழி என்பதே சரியான விடை எனினும் **அத்திக்காய்** எனத் தனித்து நிற்பதால் A) தனிமொழி எனவும் C) பொதுமொழி எனவும் எழுதி இருப்பின் 1 மதிப்பெண் வழங்கலாம். 1

v) B) உம்மைத்தொகை 1

6. **கூறியவாறு செய்க (மூன்றனுக்கு மட்டும்)** 3 X 1 = 3

i) B) கடி 1

ii) D) ஆறு பொழுதுகள் 1

iii) D) பாட வரும் 1

iv) B) இன்று வருகின்றான் என்பதே சரியான விடை எனினும் கால வழுவை நீக்கி எழுதுக எனக் கேட்கப்பட்டதால் C) நாளை வருவான் D) நேற்று வந்தான் என்ற விடைகளும் கால வழா நிலையாக இருப்பதால் அவற்றுக்கும் 1 மதிப்பெண் வழங்கலாம். 1

v) A) வந்த அப்துல்லா 1

## SECTION - C (MAIN COURSE BOOK) 31 MARKS

## பகுதி – இ ( இலக்கியம் ) 31 மதிப்பெண்கள்

7. **பின்வரும் கோடிட்ட இடங்களைத் திருக்குறள் சீர்களால் நிரப்புக** 2 X 1 = 2

i) C) சான்றோர் 1

ii) A) நடு ஊருள் 1

8**. பின்வரும் செய்யுள் பகுதியைத் தொடர்ந்துள்ள பலவுள் தெரிவு செய் வினாக்களுக்கு ஏற்ற விடை எழுதுக** 5 X 1 = 5

i) B) கல்வி 1

ii) D) நீதி வெண்பா 1

iii) C) மயக்கம் 1

iv) D) கன்னியாகுமரி 1

v) B) சதாவதானி 1

9. **பின்வரும் செய்யுள் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடை தருக** 3 X 3 = 9

i) **சொல்லேருழவனுக்குக் கவரி வீசிய வில்லேருழவன்**

ஏடாளும் புலவர் ஒருவர் நாடாளும் மன்னரைக் காண அரண்மனை சென்றார்.

களைப்பு மிகுதியால் முரசுக் கட்டிலில் கண்ணயர்ந்தார்.

அரச குற்றமான அச்செயலைச் செய்த புலவருக்குத் தண்டனை வழங்காமல் கவரி வீசினார் மன்னர்.

உறங்கிய புலவர் மோசிகீரனார். கவரி வீசிய மன்னர் தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை.

கண் விழித்த புலவர் மன்னரின் செயலைக் கண்டு வியந்து பாமழை பொழிந்தார்.

**அப்பாடல் – ' மாசற விசித்த வார்புறு வள்பின்'**

இவ்விடை எழுதி இருப்பின் 3 மதிப்பெண்கள் வழங்கலாம்.

**குறிப்பு:** திருவிளையாடற் புராணம் **(பாடல் -8)**

**'விதிமுறை கதலி பூகம் கவரிவால் விதானம் தீபம் '**

என்னும் அடியில் வில்லேர் உழவனாகிய குலேச பாண்டியன் சொல்லேருழவனாகிய புலவர் இடைக்காடனாருக்குக் கவரி வீசி சிறப்புச் செய்ததாக வருவதால்,

மன்னரது மாளிகை , வாழையும் கமுகும் சாமரையும் வெண்ணிற மேல்விதானமும் விளக்கும் உடையது.

அன்றலர்ந்த மலர்களால் தொடுத்த மாலை பூரணக் கும்பம், கொடி ஆகியவற்றால் ஒப்பனை செய்யப்பட்டது.

போற்றத்தக்க ஒளியுடைய மணிகள் பதிக்கப் பெற்றது.

அங்குள்ள புலவர்கள் சூழ அறிவை அணிகலனாகப் பூண்ட இடைக்காடனாரை மங்கலமாக ஒப்பனை செய்து பொன்னிருக்கையில் விதிப்படி அமர்த்திச் சிறப்புச் செய்தான்.

என இவ்விடை எழுதி இருப்பினும் 3 மதிப்பெண்கள் வழங்கலாம்.

ii) **நவீன கவிதை, நாட்டுப்புறக் கவிதை – ஒப்பீடு**

**நவீன கவிதை**

இறுக்கி முடிச்சிட்டால் காம்புகளின் கழுத்து முறியும். தளரப் பிணைத்தால் மலர்கள் தரையில் நழுவும். வாசலில் மரணம் நிற்பது அறிந்தும் வருந்தாமல் சிரிக்கும் இந்தப் பூவை எப்படித் தொடுக்க நான்.

**நாட்டுப்புறக் கவிதை**

கையாலே பூவெடுத்தா – மாரிக்குக்
காம்பழுகிப் போகுமின்னு
விரலாலே பூவெடுத்தா – மாரிக்கு
வெம்பி விடுமென்று சொல்லி
தங்கத் துரட்டி கொண்டு – மாரிக்குத்
தாங்கி மலரெடுத்தார்.

இவ்வாறு ஒப்பிட்டு எழுதி இருப்பின் முழு மதிப்பெண்கள் வழங்கலாம்.

**குறிப்பு :** பூத்தொடுத்தல் பாடற் கருத்தினை மட்டும் முழுமையாக எழுதி இருப்பினும் 3 மதிப்பெண்கள் வழங்கலாம்.

iii) **பக்தி இலக்கியங்களில் அறிவியல் கருத்துகள்**

**மருத்துவரை நேசித்தல் :**

மருத்துவர் உடலில் ஏற்பட்ட புண்ணைக் கத்தியால் அறுத்துச் சுட்டாலும் அது நன்மைக்கே என உணர்ந்து நோயாளி மருத்துவரை நேசிப்பார்.

**இறைவன் அருளை எதிர்பார்த்தல்** :
இறைவா! நீ உன் விளையாட்டால் எனக்கு நீங்காத துன்பத்தைத் தந்தாலும் நோயாளியைப் போல உன் அருளை எதிர்பார்த்து வாழ்கிறேன்.

இவ்விடை  எழுதி இருப்பின் 3 மதிப்பெண்கள் வழங்கலாம்.

**குறிப்பு  :** அறிவியல் கருத்துகள் எனக் கேட்கப்பட்டதால் பரிபாடல்  பாடற்  கருத்தான,

எதுவுமே இல்லாத பெருவெளியில் அண்டத் தோற்றத்துக்குக் காரணமான கரு பேரொலியுடன் தோன்றியது.

உருவமில்லாத காற்று முதலான பூதங்களின் அணுக்களுடன் வளர்கின்ற வானம் என்னும் முதல் பூதம் உருவாகியது .

அந்த அணுக்களின் ஆற்றல் கிளர்ந்து பருப்பொருள்கள் சிதறும்படியாகப் பல காலங்கள் கடந்தன .

பின்னர் பூமி குளிரும்படியாகத் தொடர்ந்து பெய்த மழையால் பூமி வெள்ளத்தில் மூழ்கியது.

மீண்டும் மீண்டும் நிறை வெள்ளத்தில் இப்பெரிய புவி மூழ்கி உயிர்கள் உருவாகி வாழ்வதற்கு ஏற்ற சூழல் தோன்றியது.

இச்சூழல் மாற்றத்தினால் உயிர்கள் தோன்றி நிலை பெற்று வாழ்கின்றன.

புவி உருவாகிய நிகழ்வை அறிவியல் அறிஞர்கள் கண்டறியும் முன்பே நம் தமிழர் கண்டறிந்தனர் என்பது தமிழருக்குக் கிடைத்த மிகப்பெரிய வெற்றியும் பெருமைக்குரிய செயலுமாகும்.

இவ்விடைக்கும்  3 மதிப்பெண்கள்  வழங்கலாம்.

**மாணிக்கவாசகர் கருத்து**

அண்டப் பெருவெளியில் நம் பால்வீதி போன்று எண்ணற்ற பால் வீதிகள் உள்ளன.

வெளியே எண்ணற்ற பால்வீதிகள் உள்ளன.

வெளியே நின்று அதைப் பார்த்தோமெனில் சிறுதூசி போலக் கோடிக்கணக்கான பால்வீதிகள் தூசுகளாகத் தெரியும்.

1300 ஆண்டுகளுக்கு முன் திருவாசகத்தில் மாணிக்கவாசகர் திரு அண்டப்பகுதியில்,

“அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்
..................... ......................
சிறிய ஆகப் பெரியோன் தெரியின்”

– என்ற அடிகள் பால்வீதிகள் பற்றிய கருத்துகளைக் கூறுகின்றன . இல்லத்துள் நுழையும் கதிரவனின் ஒளிக் கற்றையில் தெரியும் தூசுத் துகள்போல பால்வீதிகள் நுண்மையாக இருக்கின்றன எனக் குறிப்பிடுகிறார்.

இவ்வாறு எழுதி இருப்பினும் 3 மதிப்பெண்கள் வழங்கலாம்.

iv) **தினைச்சோறு விருந்து**

**வழிகாட்டல் :**
பகலில் இளைப்பாறிச் செல்லுங்கள். இரவில் சேர்ந்து தங்குங்கள். எரியும் நெருப்பைப் போல ஒளிரும் பூங்கொத்துகளைச் சுற்றத்தோடு அணிந்து கொள்ளுங்கள். சிவந்த பூக்கள் கொண்ட அசோக மரங்கள், மூங்கில்கள் ஓசை எழுப்பும் மலைச்சரிவில் உள்ள சிற்றூரை அடையுங்கள்.

**நன்னனின் கூத்தர்கள் :**
பகைவரே இல்லாமல் ஆட்சிசெய்பவன், பகை வந்தாலும் எதிர்கொள்ளும் மானமும் வெற்றியும் உடைய நன்னனின் கூத்தர்கள் என்று சொல்லுங்கள்.

**இன் சொற்கள் :**
நீங்கள் உரிமையுடன் உங்கள் வீட்டிற்குள் போவது போலவே அவர்களுடைய வீட்டிற்குள் நுழையுங்கள். அவர்களும் உங்களிடம், உறவினர் போலப் பழகி இனிய சொற்களைப் பேசுவார்கள்.

**உணவு** : நெய்யில் வெந்த மாமிசம், தினைச்சோறு ஆகியவற்றை உணவாக அளிப்பர். அவற்றை நீங்கள் பெற்றுக் கொள்ளலாம்.

இவ்விடைக்கு 3 மதிப்பெண்கள் வழங்கலாம்.

**குறிப்பு :** இவ்வினாவில் நூல் பெயர் ,ஆசிரியர் பெயர் குறிப்பிடாமல் பொதுவாகத் தினைச்சோறு விருந்து எனக் கேட்கப்பட்டதால் வீட்டிற்கு வந்த விருந்தினரை முகமன் சொற்கள் கூறி, தினைச் சோறு விருந்து அளித்ததாக மாணவர்கள் எழுதி இருப்பினும் 3 மதிப்பெண்கள் வழங்கலாம்.

v) **விருந்தினரை மகிழ்வித்துக் கூறும் முகமன் சொற்கள்**

விருந்தினராக ஒருவர் வந்தால், அவரை எதிர்கொண்டு வியந்து உரைத்தல் வேண்டும்.

நல்ல சொற்களை இனிமையாகப் பேசுதல் வேண்டும்.

முகமலர்ச்சியுடன் அவரை நோக்கி, வீட்டிற்குள் வருக' என்று வரவேற்று, அவர் எதிரில் நின்று, அவர் முன் மனம் மகிழும்படிப் பேசுதல் வேண்டும்.

அவர் அருகிலேயே அமர்ந்து கொண்டு, அவர் விடை பெற்றுச் செல்லும் போது, வாயில்வரை பின் தொடர்ந்து செல்லல் வேண்டும்.

வந்தவரிடம் புகழ்ச்சியாக முகமன் கூறி வழியனுப்புதல் வேண்டும். மேற்கண்ட செயல்கள் விருந்தோம்பல் செய்யும் இல்லற ஒழுக்கங்களாகக் காசிக்காண்டத்தில் கூறப்பட்டுள்ளன .

**குறிப்பு :** பொதுவாக விருந்தினரை உபசரித்து முகமன் சொற்கள் தாம் கூறியதாக எழுதி இருப்பினும் 3 மதிப்பெண்கள் வழங்கலாம்.

10. **பின்வரும் உரைநடை வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடை தருக** 3 X 5 = 15

i) **தாவரங்களின் அடியிலிருந்து பிரிந்து செல்லும் பிரிவுகள்**

**கிளைப் பிரிவுகள்**

**கவை** – அடி மரத்தினின்று பிரியும் மாபெரும் கிளை

**கொம்பு அல்லது கொப்பு** – கவையின் பிரிவு

**கிளை** -கொம்பின் பிரிவு

**சினை** – கிளையின் பிரிவு

**போத்து** – சினையின் பிரிவு

**குச்சி** – போத்தின் பிரிவு

**இணுக்கு** – குச்சியின் பிரிவு

**குறிப்பு:** தாவரங்களின் அடிவகை பற்றி எழுதி இருப்பின் 3 மதிப்பெண்கள் வழங்கலாம்.

ii) **விருந்தோம்பல் அன்றும் இன்றும்**

**அன்று :** புதியதாக வருவோர் இரவில் தங்குவதற்கு வீட்டின் முன்புறம் திண்ணையும் தலை வைக்கத் திண்டும் அமைத்தனர்.

அறிமுகம் இல்லாத புதியவர்களை விருந்தினராக ஏற்றனர்.

திருமணம் ,புதுமனை புகுவிழா போன்ற விழாக்களை இல்லத்திலேயே கொண்டாடி விருந்தினர்களைப் போற்றினர்.

பண்டையத்  தமிழர் உள்ளங்களில் விருந்தோம்பும் பண்பும் இல்லங்களில் விருந்தோம்பும்  இயல்பும் செழித்திருந்தன .

**இன்று :** புதியவர்களை   விருந்தினராக   ஏற்பதே  இல்லை.

அனைத்து இல்லம் சார்ந்த விழாக்களும் திருமணக் கூடங்களுக்கு இடம் பெயர்ந்து விட்டன.

அனைத்து விழாக்களும்  விருந்தோம்பலும் திருமண ஏற்பாட்டாளர்களால் செய்யப்படுகின்றன .

iii)  **செயற்கை நுண்ணறிவு கணினி மற்றும் மென்பொருள் இயந்திர மனிதன்**

**பெப்பர் -** ஜப்பானில் சாப்ட் வங்கி உருவாக்கிய இயந்திர மனிதனே பெப்பர்.

இது உலக அளவில் விற்பனையாகும் ஒரு ரோபோ.

வீட்டுக்கு, வணிகத்துக்குப், படிப்புக்கு என மூன்று வகை ரோபோக்கள் உள்ளன.

இவை மனிதரின் முகபாவனைகளிலிருந்து உணர்வுகளைப் புரிந்து கொண்டு அதற்கேற்பச்  செயல்படுகின்றன.

பெப்பரை வரவேற்பாளராகவும் பணியாளராகவும் வீடுகளிலும் வணிக நிறுவனங்களிலும் உணவு விடுதிகளிலும் பயன்படுத்துகிறார்கள்.

*இலா:*

பாரத ஸ்டேட் வங்கி ‘இலா’ என்னும் உரையாடு மென்பொருளை உருவாக்கியுள்ளது.

ஒரு விநாடிக்குப் பத்தாயிரம் வாடிக்கையாளர்களுடன் உரையாடும்.

அவர்களுக்கான சேவையை இணையம் மூலம் அளிக்கிறது.

**வாட்சன்**

2016 இல் ஐ.பி. எம். நிறுவனத்தின் செயற்கை நுண்ணறிவுக் கணினி வாட்சன்.

சில நிமிடங்களில் இரண்டு கோடித் தரவுகளை அலசி, நோயாளி ஒருவரின் புற்றுநோயைக் கண்டுபிடித்தது.

**வேர்டுஸ்மித்:**

இதழியலில் மொழிநடையை உருவாக்கும் மென்பொருளின் பெயர் வேர்டுஸ்மித்.

இதற்கு எழுத்தாளி என்று பெயர்.

இதில் தகவல்களைக் கொடுத்தால் மட்டும் போதும்; சில நொடிகளிலேயே அழகான கட்டுரையை உருவாக்கித் தரும்.

**குறிப்பு:** மின்னணுப் புரட்சிக் கருத்துகள் மற்றும் தற்காலத்தில் மாணவர்கள் அறிந்த செயற்கை நுண்ணறிவு இயந்திரம், ரோபோக்களின் செயல்பாடுகள் குறித்து எழுதி இருப்பினும் 5 மதிப்பெண்கள் வழங்கலாம்

iv) **மொழிபெயர்ப்புக் கல்வி**

மொழிபெயர்ப்பைக் கல்வியாக ஆக்குவதன் மூலம் அனைத்துலக அறிவையும் நாம் எளிதில் பெறலாம்.

பல அறிவுத்துறைகளுக்கும் தொழிற் துறைகளுக்கும் வெளிநாட்டாரை எதிர்பார்க்காமல் நாமே நமக்கு வேண்டிய அனைத்தையும் உருவாக்கிக் கொள்ள முடியும்.

மனித வளத்தை முழுமையாகப் பயன்படுத்த முடியும்.

வேலை வாய்ப்புத் தளத்தை விரிவாக்க முடியும் . நாடு,இனம், மொழி என எல்லையைக் கடந்து ஓருலகத்தன்மையைப் பெற முடியும்.

நாடு விடுதலை பெற்ற பிறகு பல நாட்டுத் தூதரகங்கள் நம் நாட்டில் நிறுவப்பட்டன.

பிறநாட்டுத் தூதரகங்கள் தங்களுடைய இலக்கியம், பண்பாடு, தொழில் வளர்ச்சி, கலை போன்றவற்றை மக்களிடம் அறிமுகப்படுத்தும் நோக்கத்துடனே தத்தம் மொழிகளைக் கற்றுக் கொடுக்க முயற்சிக்கின்றன

பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் போன்றவற்றில் பிறநாட்டு மொழிகளைக் கற்கலாம். சில தனியார் நிறுவனங்களும் பிற நாட்டு மொழிகளைக் கற்பிக்கின்றன.

இவ்விடைக்கு 5 மதிப்பெண்கள் வழங்கலாம்

**குறிப்பு :** இவற்றுடன் மொழிபெயர்ப்புக் கல்வி என்பது பாடத்தலைப்பாக இருப்பதால் அதிலுள்ள எக்கருத்துகள் எழுதி இருப்பினும் 5 மதிப்பெண்கள் வழங்கலாம்.

v) **கூத்துப்பட்டறை ந. முத்துசாமி - பற்றி எழுதுக**

தெருக்கூத்தைத் தமிழ்க்கலையின் முக்கிய அடையாளமாக்கியவர்.

'நாடகக் கலையை மீட்டெடுப்பதே தமது குறிக்கோள்" என்றவர்.

இவர் தமிழ்நாட்டின் வழி வழி நாடக முறையான கூத்துக் கலையின் ஒப்பனை முறை ,கதை சொல்லும் முறை ஆகியவற்றை எடுத்துக் கொண்டு புது விதமான நாடகங்களை உருவாக்கியவர்.

அதே வேளையில் நாடகத்தில் பயன்படுத்தும் நேரடி இசைமுறையை அறிமுகம் செய்து இசையிலும் மாற்றங்களை நிகழ்த்தியவர்.

இவரின் நாடகங்கள் பெரும்பாலும் சமூக , அரசியல் மாற்றங்களைப் பேசின.

இந்தியாவில் மட்டுமன்றி உலகின் பல்வேறு நகரங்களிலும் இவரது நாடகங்கள் நடத்தப்பட்டன.

இந்திய அரசின் தாமரைத்திரு விருது (பத்மஸ்ரீ)

தமிழ்நாடு அரசின் கலைமாமணி விருது பெற்றவர்.

**குறிப்பு :** தெருக்கூத்துக் கலை பற்றிய கருத்துகளுடன் தெருக்கூத்தைத் தமிழ்க் கலையின் முக்கிய அடையாளமாக்கியவர்.

'நாடகக் கலையை மீட்டெடுப்பதே தமது குறிக்கோள்" என்றவர் என எழுதி இருப்பின் 3 மதிப்பெண்கள் வழங்கலாம்.

## SECTION - D (NON - DETAIL) 10 MARKS

## பகுதி -ஈ (துணைப்பாடம் ) 10 மதிப்பெண்கள்

11**. துணைப்பாடம் – கட்டுரை (ஏதேனும் ஒன்று )** 1 x 10 =10

முன்னுரை – 1 மதிப்பெண், துணைத்தலைப்புகளுடன் கூடிய பொருளுரை – 8 மதிப்பெண்கள், முடிவுரை -1 மதிப்பெண்

i) விண்ணைத் தாண்டிய தன்னம்பிக்கை – முன்னுரை – ஸ்டீபன் ஹாக்கின் தோற்றம் – கருந்துளை பற்றிய ஸ்டீபன் ஹாக்கின் கருத்து – அறிவியல் கோட்பாடு - ஸ்டீபன் ஹாக்கின் பெற்ற விருதுகள் – முடிவுரை.

ii) கோபல்லபுரத்து மக்கள் – முன்னுரை – அதிகாலை கிராமத்துக் காட்சி – அன்னமய்யா வாலிபனைச் சந்தித்தல்- அன்னமய்யாவின் செயல் – விருந்தோம்பும் பண்பு – சுப்பையா புஞ்சைக்குச் செல்லுதல் – முடிவுரை

iii) முன்னுரை – அழகு கண்ட காட்சி – அனுமார் செயல்கள் – அனுமார் பாய்ச்சல் – அழகின் அனுமார் ஆட்டம் – முடிவுரை

**குறிப்பு : (** மேற்கண்ட தலைப்புகளுடன் பிற பொருத்தமான தலைப்புகள் எழுதி இருப்பினும் மதிப்பெண்கள் வழங்கலாம். முன்னுரை ,முடிவுரை இன்றிப் பத்தி வடிவில் எழுதி இருப்பின் 7/10 மதிப்பெண்களும் கட்டுரை வடிவத்துக்குக் குறைந்த பட்சம் 8/10 மதிப்பெண்களும் பிழையற்ற கட்டுரைக்கு 10/10 மதிப்பெண்களும் வழங்கலாம்.)

## SECTION -E (CREATIVE WRITING) 17 MARKS

## பகுதி -உ (படைப்பாற்றல் ) 17 மதிப்பெண்கள்

12. **காட்சியைக் கண்டு கவினுற எழுதுக** 1 X 3 = 3

4 அல்லது 5 தொடர்கள் எழுதி இருப்பின் முழு மதிப்பெண்கள் வழங்கலாம்.

தலைப்பு – ½ மதிப்பெண்

தொடர்கள் – 2 ½ மதிப்பெண்கள்

13. **கடிதம் - உறவு முறை அல்லது அலுவலகக் கடிதம்**

1 X 8 = 8

உறவுமுறைக் கடிதம் ( **சுற்றுலா செல்ல அனுமதி வேண்டிப் பெற்றோருக்குக் கடிதம்** )

வினாத்தாளில் கொடுக்கப்பட்ட முகவரி (இடம் ,தேதி ) – 1 மதிப்பெண்

விளி – ½ மதிப்பெண்

நலம் கேட்டல் - 1 மதிப்பெண்

உள்ளடக்கம் – 3 ½ மதிப்பெண்கள்

முடிப்பு – 1 மதிப்பெண்

உறை மேல் முகவரி – 1 மதிப்பெண்

( அல்லது)

**அலுவலகக் கடிதம் (மின்சாரத் தடையைத் தவிர்க்க வேண்டிக் கடிதம் )**

அனுப்புநர் – 1 மதிப்பெண் (வினாத்தாளில் கொடுக்கப்பட்ட முகவரி)

பெறுநர் -1 மதிப்பெண்

விளித்தல் – ½ மதிப்பெண்

பொருள் – ½ மதிப்பெண்

உள்ளடக்கம் – 3 மதிப்பெண்கள்

முடிப்பு – ½ மதிப்பெண்

இடம் ,தேதி - ½ மதிப்பெண்

உறை மேல் முகவரி – 1 மதிப்பெண்

14. **பொதுக் கட்டுரை (ஏதேனும் ஒன்று மட்டும் )** 1 X 6 = 6

தலைப்பு – ½ மதிப்பெண்

முன்னுரை - ½ மதிப்பெண்

துணைத்தலைப்புகளுடன் கூடிய பொருளுரை – 4 மதிப்பெண்கள்

மேற்கோள் - ½ மதிப்பெண்

முடிவுரை - ½ மதிப்பெண்

**குறிப்பு** : கட்டுரை பிழையின்றி எழுதியிருப்பின் முழு மதிப்பெண்கள் வழங்கலாம். குறைந்த பட்சம் 4 மதிப்பெண்கள் வழங்கலாம்.

**மொத்த மதிப்பெண்கள் – 80/ 80**

**********************************************************************